தி இந்து 16/04/2019

# பிளஸ் 2 முடிவு திட்டமிட்டபடி ஏப். 19-ல் வெளியீடு

● அரசு தேர்வுத்துறை மீண்டும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு

■ சென்னை

பிளஸ் 2 தேர்வு முடிவுகள் திட்டமிட்டபடி ஏப்ரல் 19-ம் தேதி வெளியிடப்படும் என அரசு தேர்வுத் துறை மீண்டும் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் 1-ம் தேதி தொடங்கி 19-ல் முடிவடைந்தன. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 8 லட்சத்து 87 ஆயிரத்து 992 மாணவ-மாணவியர், தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர். விடைத்தாள் திருத்தும் பணி மார்ச் 20-ம் தொடங்கி ஏப்ரல் 8-ம் தேதி முடிவடைந்தது.

தமிழகம் முழுவதும் 75-க்கும் மேற்பட்ட மையங்களில் ஏறத்தாழ 45,000 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டனர்.

**முன்கூட்டியே அறிவிப்பு**

பிளஸ் 2 தேர்வுகள் தொடங்குவதற்கு முன்பாக தேர்வு முடிவுகள் ஏப்ரல் 19-ம் தேதி வெளியிடப்படும் என அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. இருப்பினும், மக்களவைத் தேர்தல் பணி, ஏப்ரல் 19-ம் தேதி புனித வெள்ளிக்கிழமையாக இருப்பது போன்ற பல்வேறு காரணங்களால் தேர்வு முடிவு வெளியாகும் தேதி மாற்றியமைக்கப்படலாம் என்று சந்தேகம் மாணவ-மாணவியர், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் நிலவி வந்தது.

எனினும் திட்டமிட்டபடி பிளஸ் 2 தேர்வு முடிவுகள் ஏப்ரல் 19-ம் தேதி வெளியாகும் என்று அரசு தேர்வுத்துறை சார்பில் அவ்வப்போது விளக்கம் அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், பிளஸ் 2 தேர்வு முடிவுகள் தொடர்பாக அரசு தேர்வுத் துறை மீண்டும் அதிகாரப்பூர்வமாக ஓர் அறிவிப்பை இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. அதன்படி, பிளஸ் 2 தேர்வு முடிவுகள் குறித்த ஆய்வை (அனலிசிஸ்) தேர்வுத் துறையின் இணையதளத்தில் ஏப்ரல் 19-ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாகவே பிளஸ் 2 தேர்வு முடிவுகள், தேர்ச்சி விவரங்கள் அரசு தேர்வுத்துறை தலைமை அலுவலகத்தில் நேரில் வெளியிடப்படுவது இல்லை. தேர்வு முடிவுகள் அடங்கிய விவரங்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**குறுஞ்செய்தியில் முடிவுகள்**

மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகளை மாணவர்களின் செல்போன் எண்ணுக்கு எஸ்எம்எஸ் மூலம் அனுப்பும் முறை கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே, பிளஸ் 2 தேர்வு முடிவுகள் 19-ம் தேதி காலை 9.30 மணிக்கு தேர்வெழுதிய அனைத்து மாணவ-மாணவியரின் செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி வாயிலாக தெரிவிக்கப்படும்.

கடந்த ஆண்டு வரையில் பிளஸ் 2 தேர்வில் ஒவ்வொரு பாடமும் 200 மதிப்பெண்ணுக்கு நடத்தப்பட்டது. இந்த ஆண்டு முதல் முறையாக 100 மதிப்பெண்ணுக்கு நடத்தப்பட்டது. அதோடு தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட மொழித்தாள் தேர்வுகள் முன்பு போல 2 தாள்களாக இல்லாமல் ஒரே தாளாக நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தினமலர் 16/04/2019



■ அவினாசிலிங்கம் பல்கலையில், வேந்தர் கிருஷ்ண குமார் மாணவியருக்கு பட்டம் வழங்கினார். அருகில் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் குமார், அவினாசிலிங்கம் பல்கலை துணைவேந்தர் பிரேமாவதி விஜயன், நிர்வாக அறங்காவலர் மீனாட்சிசுந்தரம்.

# பெண்கள் சமூகத்தின் முதுகெலும்பு

பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் பேச்சு

கோவை, ஏப்.16–

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின், 30வது பட்டமளிப்பு விழா, பல்கலை அரங்கில் நடந்தது. பல்கலை வேந்தர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்து, நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.

இதில், பங்கேற்ற வேளாண் பல்கலை துணைவேந்தர் குமார் பேசியதாவது:

கல்லுாரி என்ற பாதுகாப்பு வளையத்திலிருந்து வெளியேறும் நீங்கள், பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டும். மாற்றங்களை தைரியத்துடன் எதிர்கொள்ளுங்கள். இதற்கு, உங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

1970களில் உயர்கல்வி பயில வரும் பெண்களின் எண்ணிக்கை, 5 சதவீதமாக இருந்தது, 2018ல் 85 சதவீதமாக உயர்ந்துள்ளது. வங்கி, அரசுத்துறை, அறிவியல் ஆராய்ச்சிகள் என பல்துறைகளில், வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். சமூகத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் பெண்கள். பெண்களின் திறனை முழுமையாக பயன்படுத்தும் பட்சத்தில், நாட்டின் பொருளாதாரவளர்ச்சி மேம்படும்.

இவ்வாறு, அவர் பேசினார். நிகழ்ச்சியில், இளநிலை, முதுநிலை, முனைவர் பட்டம் என, 1998 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. பல்கலை துணைவேந்தர் பிரேமாவதி விஜயன், அனைத்து துறை டீன்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.